உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகள் – பள்ளிக் கல்வித் துறை தொடர்பான சில அதிகாரங்களை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதலாக வழங்குதல்.

---

**பள்ளிக் கல்வி (சி1) துறை**

அரசாணை (நிலை) எண்: 88 நாள்: 21.04.2008

திருவள்ளுவராண்டு 2039
சர்வதாரி, சித்திரை–9

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண் 268, பள்ளிக் கல்வி, நாள் 27.8.1999.
2. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைச் செயலரின் நேர்முகக் கடித எண் 30462/சி1/2006–13, நாள் 13.11.2007.

-------

**ஆணை**

மேலே பார்வை 1ல் படிக்கப்பட்ட அரசாணையில், பள்ளிக் கல்வி தொடர்பான சில அதிகாரங்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. 12.10.2007 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், உயர்நிலைக் குழுவின் பரிந்துரையை ஏற்று, வயது வந்தோர் கல்வி மற்றும் பள்ளி சாராக் கல்வி மையங்களை மேற்பார்வையிடும் அதிகாரம் ஊரக ஊராட்சித் தலைவருக்கும், ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும், அரசாணை (நிலை) எண்.268, பள்ளிக் கல்வி, நாள் 27.8.1999ல் வெளியிடப்பட்டுள்ள ஆணைகளை மீண்டும் வலியுறுத்தி ஆணையிட வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

3. மேற்படி முடிவின் அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.268, பள்ளி கல்வி, நாள் 27.8.1999ல் வயது வந்தோர் கல்வி மற்றும் பள்ளி சாராக் கல்வி செயல்பாட்டை மேற்பார்வையிடுவது குறித்து வெளியிடப்பட்டுள்ள ஆணைகளை மீண்டும் வலியுறுத்தி அரசு ஆணையிடுகிறது.

4. மேற்காணும் ஆணையின் அடிப்படையில் தக்க நடவடிக்கை மேற்கொண்டு சார்நிலை அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்குமாறு பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்
அரசு செயலாளர்.